செ.வெ.எண்-43 நாள்-24.08.2021

# அரியலூர் மாவட்டம்
# கொரோனா சிறப்பு தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் 168 இடங்களில் 23.08.2021 மற்றும் 24.08.21 ஆகிய நாட்களில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

அதன்படி, அரியலூர் நகராட்சிக்குட்பட்ட 6-வது வார்டு பள்ளி வாசல், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (24.08.2021) நேரில் பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க அரியலூர் மாவட்டத்தில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகள் போர்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன. அதன்படி இப்பணிகளை மேலும் துரிதப்படுத்தும் வகையில் அரியலூர் மாவட்டத்தில் 23.08.2021 மற்றும் 24.08.2021 ஆகிய இரு தினங்களில் 168 இடங்களில் சிறப்பு கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் 11 ஊராட்சிகளை 100 சதவீதம் கொரோனா தடுப்பூசி செலுத்தும் வகையில் நடைபெற்று வரும் இச்சிறப்பு முகாம்களில் பொதுமக்கள் அதிகளவில் பயன்பெறும் வகையில் மகளிர் திட்ட பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் மூலமாக மாற்றுத்திறனாளிகள், முதியோர் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களை முகாம்களுக்கு அழைத்து செல்லும் வகையில் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, அரியலூர் நகராட்சிக்குட்பட்ட 6-வது வார்டு பள்ளி வாசலில் நடைபெற்ற கெரோரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மேலும் கொரோனா தடுப்பூசிகள் செலுத்துவதை அதிகரிக்கும் வகையில் அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 24 மணிநேரமும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவைக்கி வைத்து, பொது சுகாதாரம், நோய் தடுப்பு மருந்துத்துறை மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு மற்றும் மாவட்ட எச்.ஐ.வி பாதிக்கப்பட்டோர் நலச்சங்கம் இணைந்து ஆண்டிமடம், உடையார்பாளையம், செந்துறை, ஜெயங்கொண்டம், மற்றும் அரியலூர் உள்ளிட்ட வட்டாரங்களில் எச்.ஐ.வி/ எய்ட்ஸ் ஆல் பாதிக்கப்பட்டு, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ஜெயங்கொண்டம் ஏ.ஆர்.டி மையம் மூலமாக வாழ்நாளை நீட்டிக்கும் கூட்டு சிகிச்சை மருந்தை இலவசமாக பெற்றுவரும் ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்ப்பட்ட நபர்களில் முதற்கட்டமாக 50 நபர்களுக்கு அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதல்கட்ட கோவிட்-19 தடுப்பூசி பிணையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவைக்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து அரியலூர் இரயில்வே நிலையம் அருகில் உள்ள நுகர்பொருள் வாணிப கழக கிடங்கிலிருந்து, நியாயவிலைக்கடைகள் மூலம் பொதுமக்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகிக்கும் வகையில் இருப்பு வைக்கப்பட்டுள்ள அரிசி, சர்க்கரை, கோதுமை உள்ளிட்ட உணவுப் பொருட்களின் வரத்து குறித்தும், இருப்புகள் குறித்தும், விநியோகம் குறித்தும் தொடர்புடைய ஆவணங்கள் மூலமாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) திருமதி.கீதாராணி, அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.முத்துகிருஷ்ணன், மாவட்ட எய்ட்ஸ் கட்டுபாடு திட்டத்தின் திட்ட மேலாளர் திருமதி.சுமதி, முதன்மை மருத்துவ அலுவலர் மரு.கண்மணி, இருக்கை மருத்துவ அலுவலர் மரு.ரமேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**